**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.**

**C.C. No. 148/2020.**

**வழக்கு சாட்சி – அ.சா. 4 (பட்டியல் சாட்சி – 4).**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. ரகு. | ஜாதி | |
| தந்தை பெயர் | ராஜாங்கம். | தொழில் | கூலி வேலை |
| கிராமம் | மாரியம்மன்கோவில்பட்டி. | சமயம் | |
| தாலுக்கா மற்றும் மாவட்டம் | | வயது | 38/2026. |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 28.07.2026.

**(எதிரி ஆஜரில்லை. அவருக்காக பிரிவு 355 B.N.S.S. –இன் கீழ் மனுத் தாக்கல் செய்யப்பட்டு, அம்மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்).**

**<u>அரசுத் தரப்பு முதல் விசாரணை:–</u>**

நான் தற்போது, மாரியம்மன்கோவில்பட்டியில் குடியிருந்துகொண்டு, கூலி வேலை செய்து வருகிறேன். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். கடந்த 05.11.2019 ஆம் தேதி மாலை 05.45 மணிக்கு கெப்புரெங்கன்பட்டி வாத்தியார் என்பவரது தோட்டத்தற்கு அருகே, செல்வகணேன் மற்றும் செல்லம்மாள் ஆகியோர்களுக்கு ஏற்பட்ட பிரச்சனை சம்பந்தமாக, போலிசார் அங்கு வந்து, விசாரித்து, எழுதிக் கொண்டார்கள். அதில் நானும், ராஜாத்தி என்பவரும் சாட்சிகளாக இருந்து கையொப்பம் செய்தோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

சாட்சி செல்வகணேசன் எனது மைத்துனர் ஆவார். வாத்தியார் என்பரது தோட்டத்திற்கு அருகே பிரச்சனை ஏற்பட்டது என போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா? என்றால், இல்லை. காயம்பட்டவர் எனது மைத்துனர் என்பதால், காவல் நிலையத்தில் வைத்து வெள்ளைப் பேப்பரில் கையொப்பம் மட்டும் செய்து கொடுத்துள்ளேன் என்றால், சரியல்ல. புகார்தாரர் எனது மைத்துனர் என்பதால், நான் அவருக்கு ஆதரவாக, பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால்,

சரியல்ல. இந்த வழக்கிற்கும், எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால், சரியல்ல.

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.**

BHARATHA DEVI

Digitally signed by BHARATHA DEVI
Date: 2026.07.28 17:50:56 +0530

**நீதித்துறை நடுவர்,**
**தேனி.**